# ஹனுமான் பேசினது இந்தி மொழியா?

விலை அரை அணா 4 பக்கம் Regd. No. M. 5458
Phone No. 4502

# மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (13—9—49) வெளியீடு (14—9—49) [ இதழ் 35

## சென்னை மேயரின் புதிய கண்டுபிடிப்பு!

### அறியாமையா? அதிகப்பிரசங்கித்தனமா? அகம்பாவமா?—அபத்தம் பேச!

### விலை பேசி விற்க 'மொழி' என்ன வியாபாரப் பொருளா?

கருமேகம் ககனத்தில் கூடும் பொழுது, அதனைக் கண்டு களிப்பெய்திக் கோலாகலமயில், தனது எழில் மிக்க தோகையை, விரிய விரித்து, களிநடம் புரியுமாம். காண்பவர், தோகைமயில்போல் -களிப்பெய்தாமலா இருப்பர், இக்காட்சியைக் கண்டு, மயிலின் நாத்தனத்தைக் காண நேர்ந்த வான்கோழி, அதுவும் தன்னை மயிலெனக் கொண்டு, ஆட்டம் போட ஆரம்பித்து விடுமாம். அசிங்கம்-ஆபாசம்-காண நேர்ந்த கண்களைக் கழுவியாகவேண்டும். தனது அழகு நிலை அறியாது, இயல்பு தெரியாது, ஆசை ஒன்றை மட்டும் அருந்தனமாகக் கொண்டு, ஆட வருகிறதே அந்தப் பறவை, அதை என்ன செய்தால்தான் தீராது?

* * *

மாங்குயில் இசைப்பதுகேட்டு, மக்கள் இன்புறுகிறார்களே என்று, காகம் கரைய முற்பட்டால், மகிழ்வரோ மக்கள்? மண்ணாங்கட்டியாலும், கிடைத்ததைக்கொண்டு, காகத்தைநோக்கி வீசத்தானே தோன்றும்!

* * *

புலியைக் கண்டு அஞ்சாத விலங்குகள் கிடையா. இதனைக்கண்டிருந்த, வைத்த சுமைத்தாங்கி, புலித்தோலைப் போர்த்துக்கொண்டு, புதருக்குள் மறைந்துகொண்டாலும், புலியாக மாறிவிட முடியாதே! வேஷம் உணரப்படும் நிலையில், வேண்டிய மரியாதைகள் அனைத்தையும் அன்றோ, அது பெற்றுத் தீரவேண்டியதாக முடியும்?

* * *

கெட்டிச்சாயம்-நீரில் நனைத்தாலும் நீள அகலம் குறையாது-செலவு சேர்த்தியானது-நம்பர் நூறுதான்-இவ்வளவு தேவையாகிறது, இந்த அளவிற்குப் பொய்ப்பேசத்திறமைதேவைப்படுகிறது, தேங்கிக்கிடக்கும் மட்டரகமான, விலை போகாத் துணிகளை, ஏமாற்றி, எவர் தலையிலாவது கட்டி, காசுசேர்க்க! ஒருமுறை-இரு முறை-ஏன்-மும்முறைகூட, இந்த முறை-எதிர்பார்த்த பலன் தரும். ஆனால், நாள் செல்லச்செல்ல, இந்தப் பொய் நாவலரின் பித்தலாட்டம் அம்பலமாகும்.

* * *

சிலருக்கு, மக்கள் மதிப்பளிக்கும், மதிப்பைத் தேடித்தரக் கூடிய, சில இடங்கள்-பதவிகள் கிடைத்துவிடும். அந்த இடங்களுக்கு-ப்-பதவிகளுக்கு-இருந்து நிரவேண்டிய சிறப்பியல்புகள் எல்லாம், அவர்களுக்கு இருந்து நிரவேண்டும் என்ற கட்டாயம் இந்தக் காலத்தில் கிடையாது. தாராளமாகச் செலவு செய்யப் பணம், உடனிருப்பவர்களின் உள்ளம் குளிர நடந்துகொள்ளும் குணம், எதிலும் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளும்மனம், — இவைமட்டும் இருந்தால் போதும் என்ற நிலை, பொதுமன்றங்களில் உயர் பதவிகளில் இருப்பவர்களுக்கு, இன்று ஏற்பட்டு இருக்கிறது.

பதவி ஏற்றபின்னராவது, வீற்றிருக்கும் பதவியின் பொறுப்புணர்ந்து, அந்தப் பதவிக்குத் தொடர்புடைய பணி சிலவாவது புரிவோம் என்ற பெரும் நினைப்பு கொள்ளாமல், எப்படியோ கிடைத்த அந்தப் பதவியை விட்டு [illegible] சொந்த விளம்பரம் பெற என்னென்ன வழிகள் உண்டோ அவ்வளவையும் மேற்கொண்டு, நடைமுறையில் நடத்திக் காட்டுவதுதான் நல்லது என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள் சில மேதாவிகள். ஏதோ படம் திறப்பது-பள்ளி திறப்பதல்ல-; பாட்டுக் கச்சேரியில் பாடகருக்குப் பதக்கம் வழங்குவது - புதுப் பாதை போடத் திட்டமிடுவது அல்ல-; நாட்டியக் கச்சேரிக்கு தலைமை ஏற்பது-பால் பண்ணை துவக்குவது அல்ல-; வகித்து வரும் பதவிக்குள்ள கடமைகள் இவைகளெனக்கருதிக்கொண்டு, காரியமாற்றுவதிலே போட்டியிடுகிறவர்களின் புகலிடமாக இருக்கிறது, சென்னை கார்ப்பொரேஷன் மேயர் பதவி, பல காலமாகவே!

நகர சுகாதாரத்துக்கு இயல்பாக ஏற்படும் கேடுகளை முன்கூட்டித் தடுக்க-ஏழை மக்களின் குழந்தைகளுக்குக் கல்விகற்பிக்க மேலும் பல தொடக்கப் பள்ளிகளைத் துவக்க, ஏழை மக்களின் மருத்துவ உதவியைப் பெருக்க புதுப்புது மருத்துவ நிலையங்களைத் திறக்க, ஒண்ட இடமில்லாது அல்லலுறும் ஏழைமக்களின் சிறு சிறு குப்பங்களைக் கட்டி முடிக்க, நகர நிறுவனத்தின் செல்வப் பெருக்கத்திற்குச் சிறந்த தொழிற்சாலைகளை முடிந்தவகையில் ஏற்று நடத்த, நாற்றமடிக்கும் பொட்டல்காடாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் நகரப் 'பூங்கா' பலவற்றையும், அவைகளின் பெயர்களுக்கேற்ப, நல்ல மலர்ச் செடி

[ தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க ]

## ஆளவந்தார்களின் ஆணவப்போக்கை அடக்க அதுதான் வழி!

### மக்களாட்சி முறைக்கு எதிர்கட்சி இன்றியமையாதது

நாட்டிலும் சரி, சட்டமியற்றும் மன்றங்களிலும் சரி, அதிகாரத்தில் வீற்றிருப்பவர்கள் எந்தக் கட்சியினராக இருந்தாலும், அவர்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளின் நன்மை தீமைகளை, எடுத்துக்காட்ட-எதிர்த்து வாக்களிக்க-எதிர் கட்சி ஒன்று இருத்தல், மக்களாட்சி முறைக்கு இன்றியமையாததாகும். தட்டிக்கேட்க ஆளில்லாத இடத்தில், நாணி ஆளுவோர் தகுதியுடையவர்களாக இருந்தபோதிலும், நாளாக நாளாக, அந்தத்தகுதி தாழ்ந்து-தன்முனைப்புப் பெருகிவிட வழி ஏற்படும் அவர்களுக்கு.

சிலநாளைக்கு முன் அரசியல் ஆக்க மன்றத்தில் பேராசிரியர் கே. டி. ஷா அவர்களின் முயற்சியால், சோஷலிஸ்டு டெமாக்ரடிக்கட்சி என்ற பெயரிய, எதிர்கட்சி ஒன்று துவக்கப்பட்டது. நாள் கடந்த தோற்றமாயினும், நல்லாட்சி ஏற்படுவதற்கு இது துணைபுரியக் கூடும் என்பதால், அனைவராலும் வரவேற்கப்படத் தகுந்ததொன்றாகும் இது.

பம்பாய் சட்ட சபையிலும், இன்று எதிர்கட்சியில் உள்ள சுயேச்சை உறுப்பினர்களும், கிசான், தொழிலாளர், சோஷலிஸ்ட் ஆகிய கொள்கையின் பிரதிநிதிகளும், சுமார் 40 முதல் 45 உறுப்பினர்கள் வரை ஒன்று கூடி எதிர்கட்சி ஒன்றை ஏற்படுத்த முயற்சிக்கிறார்களாம். ஆட்சியாளர்களின் ஆளும்போக்கினை, மக்கள் நன்கு உணர்ந்து கொள்வதற்கு, இத்தகைய எதிர்க்கட்சி அமைப்பு ஏற்றதாக இருக்கும் என்ற காரணத்தால், இந்த ஏற்பாட்டை அனைவரும் வரவேற்பர்-வாழ்த்துவர். இதனையும் ஆளவந்தார்கள், கேலியும் கிண்டலும் கண்டனமும் செய்வர் என்பதில் சந்தேகமில்லை. இதுவரையில் சர்வாதிகாரப் பயிற்சியே பெற்று வந்தவர்கள், எதிர்கட்சியின் தாக்குதலைக் கண்டு தாங்கிக்கொள்ளும், மனவளம் பெறுவது என்பது இலகுவில் நிறைவேறக்கூடியதன்று. எந்தக் காரணத்தையாவது காட்டி, இதனையும் அடக்கத்தான் முயற்சிப்பார்கள் இப்பொழுதுதான் அதிகாரத்தை ருசி பார்க்கும் நிலைபெற்றுள்ள ஆளவந்தார்கள். இந்த முயற்சி, இன்று நல்ல பலனை உடனடியாகக் கொடுக்கவில்லையாயினும், எதிர்காலத்திலாவது, மக்கள் ஆளுமை கலையில், அருந்துணை புரியும் என்பதில் ஐயமில்லை.

## மக்கள் ஒத்துழைப்பு மறுக்கப்படுகிறதே

### மந்திரியார் மழுப்பல் பேச்சு

"கள்ளமார்க்கட்டை ஒழிப்பதில் அரசாங்கத்தாருடன் மக்கள் போதுமான அளவு ஒத்துழைக்கவில்லை" என்று சென்னை உணவுமந்திரி திரு. ரோச் விக்டோரியா எழும்பூர் இலக்கிய சங்கத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கள்ளமார்க்கட் காரர்களைத் தூக்கிலிடவேண்டுமென்றார் முதலமைச்சர் பதவி பெறுமுன் பண்டித நேரு. ஆனால், அவர் முதலமைச்சரான பிறகு, எத்தனையோ கள்ளமார்க்கட்காரர்கள், சட்டசபை அரசியல் நிர்ணய சபை முதலியவற்றில் அங்கம் வகிக்கும் அளவுக்கு உயர்ந்தார்கள். சென்னையில் கள்ளமார்க்கட் காரர்கள் சிலர், காங்கிரஸ் அபேட்சகர்களாகக் காங்கிரஸாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

முதலமைச்சர் நேருவோ, அல்லது காங்கிரஸைச் சேர்ந்த பிற தலைவர்களோ, அமைச்சர்களோ என்ன செய்யவிட முடிந்தது? கள்ளமார்க்கட்காரர்களைப்பற்றி இவர்கள் கூறியனவெல்லாம், வெறும்வறட்டுக்கூச்சல் என்றும், காங்கிரஸின் முக்கியஸ்தானங்களை சில கள்ளமார்க்கட்காரர்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறதென்றும், பின் பொதுமக்கள் கொள்ள வேண்டியதாயிற்று.

சென்னைமாகாணத்திலேயே பல கள்ளமார்க்கட்காரர்களை, முக்கியமாக அரிசியைப் பதுக்கி வைத்துக் கள்ளமார்க்கட்டில் விற்றுக் கொள்ளை இலாபம் அடித்த பேர்வழிகள் சிலரைப் பொதுமக்கள் அதிகாரிகளிடம் காட்டிக்கொடுத்தனர். ஒருசிலர், தவிர, பெரும்பாலான பெரிய கள்ளமார்க்கட்காரர்கள் வெளிப்படாமற் போயினர். பல இடங்களில் பொதுமக்களின் புகார்கள் கவனிப்பாரற்றுப்போயின. அமைச்சர்கள் பொது மக்கள் உதவி வேண்டுமென்பதை அழகாக அலங்காரமாகப் பேசுவதுபோல... [illegible]

[illegible] கென்று வைத்துக்கொள்ளலாம். ஆனால் உண்மையில் பொதுமக்களுடன் அதிகாரிகள் கள்ள மார்க்கட் ஒழிப்பு விஷயத்தில், எக்காரணத்தாலோ தக்கபடி ஒத்துழைக்கவில்லை, என்றுதான் கூறவேண்டும். இதனை அண்மையில் அமைச்சர்பதவியேற்ற திரு. ரோச் விக்டோரியா [illegible] அறிந்திருக்க முடியும்! மறந்தவர் [illegible] பேசும் மேடைப்பேச்சு போல, அவரும் [illegible] பொதுமக்கள் உதவி [illegible] மெளப்பேசிவிட்டார் [illegible]

### காங்கிரஸ் கட்டளையும்-மேலிடத்தின் தாக்கீதும்!

கீழ்ப்பஞ்சாப் ஸ்தல ஸ்தாபனங்களில் நியமனம் பெற்றுள்ள சட்டசபை உறுப்பினர்களை, இராஜிநாமாச் செய்துவிட காங்கிரஸ் கமிட்டி உத்திரவிட்டிருக்கிறது. இந்த உத்தரவைப் பொருட்படுத்த வேண்டாம் என்றும், பதவிகளை விட்டு விலக வேண்டாமென்றும் காங்கிரஸ் மேலிடம் தாக்கீது பிறப்பித்து இருக்கிறது? ஏன் இந்த ஒற்றுமை?

மாலை மணி

சென்னை 13—9—49 செவ்வாய்க்கிழமை

# குமாரசாமியார் "உபதேச காண்டம்"

'பொதுநலத்திற்கான வேலைகளைச் செய்யும்போது, நகரசபை, கட்சி புணர்ச்சியால் தூண்டப்பட்டுக் காரியமாற்றக் கூடாது. நகரசபை அலுவல்கள் சம்பந்தமான ஒவ்வொன்றையும் பற்றிக் கவனிக்கும் போது, எல்லா மக்களின் நல் வாழ்வையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்"

என்ற உபதேச மொழிகள், சென்னை முதலமைச்சர், தோழர் பி. எஸ். குமாரசாமியாரிடத்திருந்து, திருவாய் மலர்ந்தருளப்பட்டிருக்கின்றன.

உபதேசம் நல்ல உபதேசம்தான், வரவேற்கத்தக்கதுங் கூட. அப்படி, யாருக்கு முதலமைச்சர் உபதேசம் அருளியிருக்கிறார்? கட்சி வெறி புணர்ச்சியால் தூண்டப்பட்டு, தலைவிரித்தாடி, நகராண்மை—நாட்டாண்மைக் கழகங்களிலே போட்டியிட்டு, நின்றார்களே காங்கிரஸ்காரர்கள், அந்தக் கனவான்கள் கூட்டத்தின் மத்தியிலா? அத்தகையோரின் இடையிலே அறிவுரை பகர, அவ்வளவு 'அவசியம்' எப்படி ஏற்படும் அரசாங்கத்தின் முதல்வருக்கு! அவர்கள் தான் சொந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிற்றே! மேலும் எப்பொழுது ஒருவர் 'காங்கிரஸ்காரர்' என்று பெயரெடுத்து விட்டாரோ, அப்பொழுதே அவர் செய்வதெல்லாம் 'நன்மைக்கு'த்தான் என்பது பெறப்படவில்லையா! ஆகவேதான் காங்கிரஸ்காரர்களுக்கு, உபதேசமொழி நவில முதலமைச்சருக்கு ஆசை பிறக்கவில்லைபோலும்!

பின் எங்குத்தான் இந்த உபதேசப் பொன்மொழிகளைக் கூறினார்? எந்த நகரசபையிலே காங்கிரஸ் உறுப்பினர்கள் அதிகம் இல்லையோ, எந்த நகரசபையில் சுயேச்சையாக நின்று, தேர்தலில் வெற்றி பெற்று, பலராக நுழைந்திருக்கிறார்களோ, அந்த நகரசபையில் நின்றுதான், நகரசபை உறுப்பினர்க்கு நன்மொழி பகர்கிறார் முதல் மந்திரியார். விருதுநகர் நகரசபைக் கூட்டத்தில்தான், முதலமைச்சரின் இந்த "உபதேசகாண்டம்" அரங்கேற்றப்பட்டிருக்கிறது. அரங்கேற்றுதலைச் செவியாரக் கேட்டவர்களில், அன்பர் காமராஜரும் ஒருவராவார்.

விருதுநகர் நகரசபையின் வரவேற்புக்குப் பதிலளிக்கும் முறையில் பேசும் போது, தோழர் பி. எஸ். குமாரசாமியார் குறிப்பிட்டவையே மேலே காட்டப்பட்டவையாகும். இந்த உபதேசமொழிகளை, எங்குக் கட்சிமாச்சரியம் அதிகம் இல்லையோ, அந்த நகரசபை உறுப்பினர்களிடத்தில் கூறுவதைவிட, அன்பர் காமராஜரைத் தனியே வைத்துக்கொண்டு, அவருக்குக்கூறியிருந்தால், எவ்வளவோ நல்லதொரு முயற்சியாகக் கொள்ளப்பட்டிருக்கும். நகரசபை மன்றத்தில் உட்கார்ந்துகொண்டு, தோழர் காமராஜரும் அந்த அறிவுரையைக் கேட்டுக்கொண்டுதான் இருந்தார் என்றாலும், அது தனக்குச் சொல்லப்பட்டதல்ல என்ற கருத்தோடு இருந்திருக்கக்கூடும் என்ற நினைப்பிலேதான், அவருக்குத் தனியாக உபதேசித்தல் நல்லது என்று கூறுகிறோம்.

விருதுநகர் நகரசபை, கட்சி மாச்சரியங்கொள்ளாமல், பலவேறு கட்சிச்சார்புடைய தலைவர்களையும், பல்வேறு துறைபட்ட கருத்துடையாரையும் வரவேற்று, வாழ்த்து மடல் அளித்துத் தனது பொதுமை நிலை வகிக்கும் தன்மையைப் பல வாய்ப்புக்களிலும் காட்டிக்கொண்டுவந்திருக்கிறது. அந்த நகரசபையில், கட்சி மாச்சரியத்தோடு விளங்கக்கூடிய ஒரு அரசியல் கட்சி உண்டென்றால், அது காங்கிரஸ் கட்சியாகத்தான் இருக்கமுடியும். முதலமைச்சரின் நன்மொழி காங்கிரசல்லாத சுயேச்சை உறுப்பினர்களுக்குத் தேவையில்லை — அதற்குரிய அடிப்படை அவசியம் அவர்களிடம் காணப்படாத காரணத்தால் முதலமைச்சரின் மொழிகளைக் கேட்டுத் திருந்தவேண்டிய நிலையிலிருப்பவர்கள் காங்கிரஸ் உறுப்பினர்களாக நகராட்சி மன்றத்தில் இடம்பெற்றிருப்பவர்கள்தான்! அந்தத் திருந்திய நிலையை அடைய, அவர்கள் முயற்சியாவது எடுத்துக்கொண்டால்தான், முதல் மந்திரியாரின் கூற்றுக்கு ஏதாவது சிறிதளவு மதிப்பு கொடுத்ததாகக் கருதப்படும்.

நாட்டாண்மை-நகராண்மை ஆட்சிமன்றங்களில் கட்சிகளுக்கு இடமில்லை, கட்சிப் பேரால் உறுப்பினர்கள் நிறுத்தப்பட வேண்டிய அவசியமில்லை, திறமையுடையோர் தேர்தலுக்கு நிற்பதே அழகாகும், அந்தமுறை நடைமுறைக்கு வரவே சகல கட்சிக்காரர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று நாம் கூறி வந்தோம்-கூறிவருகிறோம். கட்சிகள் போட்டியிடும் நோயை வளர்த்தவர்கள் காங்கிரஸ்காரர்கள்-அதிலும் இன்று கனவேகமாக வளர்த்து வருபவர் தோழர் காமராஜர்தான்! அதற்குரிய 'பெருமை' அனைத்தும் அவரைத்தான் சாரும்!

அண்மையில் நடந்த ஜில்லா போர்டு (நாட்டாண்மைக் கழகம்) தேர்தலில் காங்கிரஸ் கட்சி போட்டியிட்ட இலட்சணமும், அதற்குக் காமராஜ் செய்த 'சூறாவளி'ப் பிரசாரமும், அதற்கு மந்திரிகள் காட்டிய பரிவும், அதிகாரிகள் காட்டிய அக்கரையும் நாடு நன்கறிந்தவைகளாகுமே! தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகத் தோழர் காமராஜர் உள்ளிட்ட காங்கிரஸ்காரர்கள் எடுத்துக்கொண்ட இழிநிலைப் பிரசாரம் எவ்வளவு! நிறுத்திவைக்கப்பட்ட இடங்களில், அடியற்று வீழ்ந்த காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு! இவ்வளவையும் அறிந்த பிறகு, உள்ளபடியே பிரதமர், யாருக்கு உபதேசம் செய்திருக்கவேண்டும்? காங்கிரஸ்காரர்களுக்கல்லவா! கட்சி மாச்சரியத்தைக் கைவிடவேண்டியவர்கள் அவர்களல்லவா! நிலைமை அவ்வாறு இருக்க, காங்கிரசல்லாத பிறருக்கு உபதேசிப்பதிலே, என்ன பொருள் இருக்க முடியும்!

நகரசபை உறுப்பினர்கள் மட்டுமல்ல, பாராளும் மன்றம் புகுந்து, ஆட்சிப்பீடம் ஏறியிருப்பவர்களுக்குக் கூட, இந்த உபதேசம் அவசியந்தான். அதிலும் இந்த நேரத்தில் மிக அவசியம்; அதிலும் காங்கிரஸ்காரர்களுக்கு மிக மிக அவசியமாகும்.

**கட்சி மாச்சரியங்கொள்ளாமல் மக்கள் எல்லோரையும் ஒரேகண் கொண்டு நோக்கி, அவர்கள் நல் வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு பணிபுரிய வேண்டும்** என்னும் கருத்துப்படக் கூறும் மொழியை, முதல் மந்திரியாரே தமக்குள் ஒரு தடவை சொல்லிப் பார்த்துக்கொள்ள வேண்டும்; அதுதான நல்லது. ஆட்சிப்பீடம் ஏறி, நாட்டுமக்களனைவருக்கும் சொந்தமான பொதுப்பதவிகளில் வீற்றிருப்போர், பொது நோக்குடையவராக ஆகுதல்தானே முறை! அதைத்தானே நகராட்சிசபையில் இருக்கவேண்டும் என்று அன்பர் குமாரசாமியார் குறிப்பிடுகிறார். அந்த அரும்பண்பு இன்றைய ஆட்சிப்பீடத்தினருக்கு இருக்கிறதா? இல்லையே! ஏன் இல்லை?

அரசாங்கத்தின் பொதுச் சலுகைகள் அனைத்தும், காங்கிரஸ் கட்சியார் பக்கம்தானே வளைத்து உழுக்கப்படுகின்றன. பொதுநலம் பேண, மன்றம் ஏறியிருக்கும் மந்திரிகள் சொந்தக் கட்சியாளருக்குத்தானே வசதிகளுக்கான வழி அமைத்துத்தருகின்றனர். அண்ணாமலை நகர் மாணவர் வழக்கில், ஒரே பிரிவின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டுக் குற்றக் கூண்டில் ஏற்றப்பட்டிருந்த இரு கட்சியைச் சார்ந்த மாணவர்களில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டும் விடுதலை செய்யும்படியாக அதிகாரம் வளைந்து கொடுத்ததே, கொடுக்கலாமா?. மதுரை மாநாட்டுக் கொட்டகை எரியுண்டபோது, காங்கிரஸ்காரர்களின் ஈனச் செயலைக் கண்டிருந்தும், அதிகாரம், கண்ணைமூடி மௌனியாக வேடம் புனைந்து நின்றதே, நிற்கலாமா?. ஆங்காங்கு, திராவிட இயக்கத்தவரை மாற்றார் தாக்கியதாகத் தொடுக்கப்பட்ட வழக்குகளில், மாற்றார் பக்கமே அதிகாரம் சாய்ந்து இருப்பானேன். இருக்கலாமா? ஆகவே கட்சி மாச்சரியத்தை விட்டுச் செயல்புரியும் மனப்போக்குக் கொள்ள வேண்டியவர்கள், காங்கிரஸ்காரர்களேயல்லாமல், ஏனையோரல்ல, இன்றைய நிலையில்!

எனவே, முதல்மந்திரியார் செய்த "உபதேசகாண்டம்", காங்கிரஸ் தலைவர் காமராஜருக்கும், காங்கிரஸ் மந்திரிகளுக்கும், காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும், இனியாவது நல்லறிவைக் கொடுக்குமேயானால், அதனால் பலனுண்டு என்று கருதலாம்!

# உணவு உற்பத்தியைப் பெருக்க உரிய வழிகள்

## நிலக் கணக்கெடுக்கவேண்டும்
## உழவர்களுக்கு வேண்டிய உதவியும் வேண்டும்

"நாட்டிலே உணவுப் பொருள் உற்பத்திக்குத் திட்டமிட்டாகிவிட்டது. இரண்டே ஆண்டுகளில் நிலைமை சீரடைந்துவிடும்" என்பவர்கள் சிலரும், "உணவுக்குறைவு நம் நாட்டில் இல்லையே!" என்பவர்கள் சிலருமாக, வெறும் பேச்சுப் பேசிக் காலங் கழித்து ஏட்டிலே திட்டம் தீட்டிக் காட்டும் அரசாங்க மேலிடத்து அதிகாரிகள் இன்று நாட்டில் பலர் இருக்கக் காண்கிறோம். மக்களிடத்தில் எதையாவது கூறி, அவர்கள் மனத்திலுள்ள அச்சத்தை அடக்கி வைக்க இந்த முயற்சிகள் செய்யப்படுகின்றனவே தவிர, உண்மையில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேலை செய்வதாகத் தெரியவில்லை.

### உணவு உற்பத்தி பெருக வேண்டுமானால்

மாகாணத்தில் எங்கெங்கே எவ்வளவு நிலங்கள் பயிரிடக்கூடியவைகளாக இருந்தும், பயிரிடப்படாமல் கிடக்கின்றன என்பதைக் கணக்கெடுக்கவேண்டும். பயிரிடப்படாத நிலங்கள், பயிரிடப்படும் நல்ல விளைச்சல் இல்லா நிலங்கள் இவற்றை நன்கு பயிராகுமாறு செய்ய என்னென்ன திருத்தங்கள், உதவிகள் தேவைப்படுகின்றன என்பதனை இடத்துக்கேற்பத் தனித் தனி ஆராய்ந்து கண்டு பிடித்தல் வேண்டும்.

தண்ணீர், எரு, திறமான வித்து, பூச்சித் தொல்லையினின்று பாதுகாப்பு, உழவு வேலையை விரைவுபடுத்த இயந்திர சாதனங்கள், உழவர்கள் வறுமையடையாதபடி விலை நிர்ணயம் முதலிய எல்லாவற்றையும் தனித் தனிக் கவனித்து ஆவன செய்தல் வேண்டும்.

தக்க திறமையுடைய விவசாய நிபுணர்கள், இஞ்சினியர்கள் முதலியவர்களை வெறும் பிரசங்க அளவில் நிறுத்தி விடாமல், செயலில் இறங்கி, நவீன கால முறைகளை உழவர்களுக்கு அனுபவப் பூர்வமாகக் காண்பித்து, அவர்களை விளக்கப்படுத்தி, நவீன கால உழவுக்கு வேண்டிய சாதனங்களை அளித்து உதவி, இடை விடாமல் கிராமம் கிராமமாக இவ்வேலையை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு ஏக்கர் நிலத்தில் இந்திய மாகாணங்கள் 750 ராத்தல் அரிசியையே உற்பத்தி செய்ய முடிகிறது என்பதை எடுத்துக் காட்டி, அதே ஒரு ஏக்கர் நிலத்தில் ஜப்பான் 3000 ராத்தல் அரிசி, நவீன முறைகளின் காரணமாக உற்பத்தி செய்கிறதென்பதை விளக்கி நமதுழவர்களை நவீன முறைகளில் கருத்துச் செலுத்துமாறு உற்சாகப் படுத்த வேண்டும்.

விளையும் பொருள்கள் விவசாயிக்கு நஷ்டம் வராத முறையில் பிறருடன் சமமாக வாழ்க்கை நடத்துவதற்குரிய வருவாய் வரக்கூடிய முறையில் விலை நிர்ணயம் செய்யப்படும் என்ற உறுதி அவர்கள் நெஞ்சில் பதிந்திருக்குமாறு செய்யவேண்டும். உழவர்கள் தாங்கள் வாங்க வேண்டிய சாமான்களுக்கு எந்த அளவு விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறதோ அந்த அளவுக்கு அவர்களுக்குக் குறையாத வருவாய் கிடைப்பதற்குரிய வழி செய்யப்படவேண்டும். விலைவாசிகள் உயர்ந்தும் தாழ்ந்தும் அடிக்கடி வாங்குவோருக்கும் உற்பத்தி செய்வோருக்கும் தொந்தரவை உண்டாக்காதபடி விலைவாசிகள் ஒரே நிலைமையில் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். இந்த நிலைமையைச் சமாளிப்பதற்காக ஏற்படும் பொருள் செலவை அரசாங்கம் சமாளிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். அரசாங்கம் உழவர்களுக்கு எல்லாவகையிலும் வசதிகள் செய்துதர முன்வரவேண்டும்.

இங்ஙனம் இன்றுமுதலே செய்ய அரசாங்கம் முனைந்தால், பிற இனங்களில் செலவு செய்து கொண்டிருப்பதை விட்டு, இத்துறையில் முழுக்கவனத்தையும் செலுத்தினால், நாம் மிக விரைவில் உணவுப் பஞ்சத்திலிருந்து மீளலாம். அப்படியின்றி, காகிதத்திட்டங்கள் தயாரித்துக் கொண்டும் மேடைப் பிரசங்கங்கள் செய்து கொண்டும் திரிந்தால், விரைவில் சமாளிக்க முடியாத உணவுப்பஞ்சத்தில் சிக்கிக் கொள்வோம் என்பது திண்ணம்.

# சேரிகளுக்கு உதவப் பணமில்லை பணமில்லை

## ஷெனாய் நகர் கட்டப் பணமிருக்கிறது

சென்னை நகரசபைமேயர் இராயபுரம் பனைமரத்தொட்டி பிரசவ வைத்திய விடுதியைத் திறந்துவைத்துப் பேசியபோது,

"சென்னை நகரில் 108 சேரிகள் இருக்கின்றன. அவற்றில் சுமார் 6 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். அவர்களுக்கு ஒரு சிறிதளவேனும் உதவி செய்து, வசதிகள் புரிதல் வேண்டுமென நகரசபை மிகவும் முயற்சித்து வருகிறது. இதைக் கடமையாகவும் கருதுகிறது. ஆனால்.........ஆனால் போதிய பணமில்லை"

என்று கூறினார். சென்னை நகரசபை, ஷெனாய் நகர் அமைக்கப் பணம் செலவிட்டது. போதிய வருமானம் தரமுடியாத, மீன் இலாக்காவை நிர்வகிக்கப் பணம்செலவிட்டது. ஹாக்கி ஸ்டேடியம் கட்டப் பணமிருந்தது. அதற்கென ஒரு 'கிளப்' கட்டிடம் கட்டப் பணம் கோரத் தெரிந்திருந்தது. ஆனால், 6-லட்சம் ஏழை மக்களின் சுகாதார நலன்களைக் கவனித்து உதவி செய்யும் பிரச்னை வரும்போதுதான் பணமில்லாமற் போய்விடுகிறது. சென்னை நகரசபையின் இந்தப் பணக்காரப் புத்தி ஒழியவேண்டுமானால், பாரபட்ச செயல்களை ஒழிக்க வேண்டுமானால், பொறுப்புள்ள மேயரும், ஏழை மக்கள் நலனில் அக்கரைகொண்ட நகரசபை அங்கத்தினர்களும், பெரு முயற்சி செய்து பணக்காரப் பேட்டைகளை அழகுபடுத்தும் வேலைகளை நிறுத்தி வைத்து, முதலில் இந்த ஏழைகளின் நலன்களைக் கவனிக்கும் வண்ணம் வேலை செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் இன்றிப் பணமில்லை என்ற வெறும் பேச்சால் விளையக்கூடிய பயன் எதுவுமில்லை. ஆனால் மக்கள் உள்ளத்தில், நகரசபை என்பது பணக்காரர்களிருக்குமிடத்தில் மின்சார விளக்குக்குப் பதில் 'மெர்க்குரி' விளக்குப் போடும் சம்பெனி என்றெண்ணிக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுவிடும்.

## நிலைமைக்கேற்ற :: நடை முறை

# சேமிப்புக் கமிட்டித் தலைவருக்கு ஒரு நல்ல யோசனை

"சேமிப்புச் செய்யும் வழக்கம் இந்நாட்டு மக்களிடம் அரிதாகக் காணப்படுகிறது. சில பணக்காரர்கள் மட்டுமே சேமிக்கின்றனர். இதனால் அரசாங்கத்திற்குப் போதிய நிதி வருவதாக இல்லை"

என்று வங்காள தேசிய சேமிப்புக் கமிட்டித் தலைவர் கூறுகிறார்.

இந்த நாட்டிலே சராசரி மனிதனுக்குக் கிடைக்கும் வருவாய் அரைவயிற்றுச் சோற்றுக்கே போதாமலிருக்கையில் அவன் சேமிப்பதெப்படி? மிச்சப்படுத்தக்கூடிய அளவு வருமானமுடைய பணக்காரர்கள் தாம் சேமிக்க முடியும். ஏழைகள் தங்கள் வருமானம் முழுச் சோறு சாப்பிடும் அளவுக்கு உயர்த்தப்படும் நாள் எந்நாள் என்று ஏங்கியிருக்கையில் சேமிப்புச் செய்வது இயலுங்காரியமா?

ஆனால், சேமிப்புக்கமிட்டித் தலைவர் மக்களிடை நெருங்கிப் பழகி கலந்துறைந்தாலல்லவா இந்த உண்மைகளை அறியப்போகிறார்? அவர் நிலையிலிருந்து பார்த்தால், அனைவரும் சேமிக்கவேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கவும் தோன்றலாம். ஆனால் நடப்பதென்னவோ நிதி சேராதது தான்.

இவ்வண்ணம் எவ்வளவு கூறியும், அறிக்கைகள் விட்டும் பிரசாரம் செய்தும் பலனற்று விடவே, நடன இசை ஒன்று வைத்து அதற்கு நுழைவுக் கட்டணமளித்து வந்த மக்களின் கட்டணத்தொகையில். 25 சதவிகிதம் செலவைக்கழித்துக்கொண்டு 75 சதவிகிதம் சேமிப்பு ஸ்டாம்பாகத் திருப்பியளித்தாராம் அந்தத் தலைவர்.

நாம் ஒரு யோசனை கூறுகிறோம். நடன இசை வைப்பதைவிட, மாளிகை விருந்துகள், வனவிருந்துகள் முதலியவற்றை ஏற்பாடு செய்து அதற்கு நுழைவுக் கட்டணம் தருபவர்கள் அனைவரும் வரலாமென்று தெரிவித்தால் ஏழைகளும் கடனாவது வாங்கிக்கொண்டு வந்து, நுழைவுச்சீட்டுப் பெற்று, விருந்து சாப்பிட்ட பிறகு, முக்கால் பாகக் கட்டணத்தைத் திரும்ப சேமிப்பு ஸ்டாம்பாகப் பெறுவர். இதனால் அவர்களுடைய வயிற்றுப் பசியும் தீரும். அரசாங்க நிதியும் பெருகும். இப்படிச் செய்யாமல் நடன இசை, நாடகம் என்றெல்லாம் வைத்து நடத்தினால் இவற்றைப்பார்க்க வருபவர்களும் பணக்காரர்கள் தானே! ஏழைகளுக்கு இசை கேட்க நேரமேது?

## "மாலை மணி"

(திராவிடர் தமிழ்த் தினசரி)

| | |
|---|---|
| வருட சந்தா | 15—0—0 |
| 6-மாத " | 7—8—0 |
| 3-மாத " | 3—12-0 |

மானேஜர்

## இனி நடப்பவை

சைதாப்பேட்டை- செங்கற்பட்டு மாவட்டக்கழகத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் 6-வது மாநாடும் கண்காட்சியும், 14-9-49 புதன்கிழமையன்று, சைதாப்பேட்டை நகராண்மைக்கழக உயர்நிலைப்பள்ளியில் நடைபெறும். தோழர் வி. கே. ராமசாமி மாநாட்டிற்குத் தலைமை வகிப்பார். தோழர்கள் கே. மாதவமேனன், டி. வி. அப்பர் சுந்தரர், கே. வெங்கிடுசாமி, என். டி. சுந்தரவடிவேலு, டி. வி, நீலகண்டம், ஜி. வில்லாய், தோழியர் குட்டிமாளு அம்மாள் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

* * *

சென்னை அரசினர்கலைக்கல்லூரி-நிதக்காதி தமிழ்ச் சங்கத்தின்சார்பாக 'பாரதியார் விழா' 14—9—49 மாலை 3 மணிக்கு நடைபெறும். தோழர் எஸ். இராமசாமி (சென்னைமேயர்) தலைமைவகிப்பார். தோழர் ம.பொ. சிவஞானம் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

காரைக்கால்— தோழர்கள் கோ. துரைராசு- சௌந்தரம்மா திருமணம் 16-9-49 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். பலர்பேசுவார்கள்.

### சட்டக் கல்லூரித் தமிழ்ச் சங்கம்

## பாரதி விழா

14—9—49 புதன்கிழமை மாலை 4-மணிக்கு சென்னை சட்டக் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக

தோழர் எஸ். பி. சண்முகசுந்தரம் அவர்கள் தலைமையில்

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. கா. அப்பாத்துரை எம்.ஏ., எல்.டி. ஆகியோர் பேசுவார்கள்.

## பரீட்சையில்கலவாமலே பட்டம்-பதவி!

கிழக்குப் பஞ்சாபில், ஜபல்பூர் நகரில், பல வீடுகளை, திடீரென்று போலீசார் சோதனையிட்டனர். பஞ்சாப்பல்கலைக்கழகத்தின் முத்திரை பொறிக்கப்பட்ட எதுவும் எழுதப்பட்டிராத நிலையில் உள்ள, பொய்அத்தாட்சிப்பத்திரங்களைக் கைப்பற்றினர். ஐந்து ஆசிரியர்கள் உள்பட அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேலை செய்வதற்காகவும், மேல்படிப்பிற்காகவும் ஆசைப்படுகிறவர்கள், அதற்கான தேர்வில் கலந்து கொள்ளாமலே, கொஞ்சம் பணம் கொடுத்து விட்டு, பொய்யான அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள, இந்த முறை மேற்கொள்ளப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

### பிரிவு இயன்மொழிக் கூட்டம்

தர்மபுரி, செப்.9—

8—9—49ம் தேதி மாலை $3\frac{1}{2}$ மணிக்கு இங்குள்ள பள்ளித் தமிழாசிரியர் திரு. அப்பாவு அவர்களையும், திரு. கோபால் அவர்களையும் மாற்றி விட்டதைக் குறித்து ஒரு பிரிவு இயன்மொழிக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் திரு. த[illegible]மையாசிரியர் இலக்குவனார் தலைமைதாங்கினர். க. இளங்கோவன், இரா. ஆறுமுகம், லா. சுப்பு கிருட்டிணன், தா. ஜெகதீசன், ஆகியோர் இயன்மொழி கூறினர். ஆசிரியர்கள் இருவரும் மாணவர்களுக்கு நன்மொழி கூறினர். முடிவில் திரு. அப்பாவு அவர்களுக்கு, பள்ளிக்கூட மாணவர்களின் நினைவாக க. இளங்கோவன் ஒரு மையூற்றும் எழுதுகோலை அளித்தார். செயலாளர் க. இளங்கோவன் அவர்கள் நன்றிகூற, கூட்டம் $4\frac{3}{4}$ மணிக்கு இனிது முடிந்தது என்ச் செயலாளர் எழுதுகிறார்.

## மழை நின்றும் தூவானம் விடவில்லை!

### பிணக்கைப் பெருக்க பக்தி முந்துகிறது!

பஞ்சாப் மாகாணத்தை இரண்டாகப் பிளந்துவிட்ட பின்னர், பாக்கிஸ்தான் நிலப்பரப்பின் எல்லை ஓரத்திலே, சீக்கியர்களின் தொழுகை ஸ்தலங்கள் சில இருக்க இடமேற்பட்டுவிட்டன. அந்தத் தொழுகை இடங்கள் இருக்கும் நிலப்பரப்பும் கீழ்பஞ்சாப் பிரதேசத்தோடு சேர்க்கப்படவேண்டுமென்ற கிளர்ச்சி தலைகாட்ட ஆரம்பித்து இருக்கிறது. இதுவுமல்லாமல், எல்லை ஓரத்தில் இல்லாமல் உள்நாட்டில் உள்ள சீக்கியர் தொழுகை இடங்களுக்கும் பாக்கிஸ்தானைப் பாதுகாப்பளிக்க வற்புறுத்த வேண்டுமென்ற கிளர்ச்சியும் கிளம்பி இருக்கிறது. பல காரணங்களால், இரு அரசுகளுக்கு மிடை வளர்ந்து வரும் பகைமை உணர்ச்சி, சீக்கியர்களின் இம்முயற்சியால் பெரிதாகுமேயன்றிக் குறைவுபடாது. பாகிஸ்தான்- இந்தியா என்ற, இரு அரசுகள் ஏற்பட்டுவிட்ட பின்னரும், நட்பு உணர்ச்சி வளர வழி செய்வதற்கு பதில், பிளவைப் பெரிதாக்கும் பணி புரிவது எவருக்கும் நல்லதல்ல. மக்களைப் பிளவுபடுத்துவது, உண்மையான பக்தியின் இலட்சணமும் அல்ல. மழை நின்றும் தூவானம் தீராமல் இருப்பது, மக்கள் நல்வாழ்வில் நாட்டமுடைய அனைவருக்கும் வேதனை தரும் விஷயந்தான்.

## அந்தப் பிடாரிகளின் போக்கும் அதுவேதான்!

### நாசத்தை நாடியே நடக்கிறார்கள்

பாகிஸ்தானிலுள்ள துணி வியாபாரிகள் ஐவர் அடங்கிய ஒருகுழுவை நியமித்து இருக்கிறார்கள். எதற்குத்தெரியுமா? இரு நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள மனக்கசப்பை மாற்றவா? அதுதான் இல்லை. பிளவை மேலும் மேலும் பெருக்க, நடவடிக்கை எடுத்துக்கொள்ளுகிறார்கள் அந்த நாசக்காரர்கள்.

இந்தியத்துணியை மூன்று நான்கு நாளைக்குமுன் கராச்சியில் தீக்கிரையாக்கினர். இதனால் அவசியமில்லாத துவேஷ உணர்ச்சி இரு நாட்டுமக்களிடையேயும் மூள ஆரம்பித்திருக்கிறது. அத்துடனாவது நின்றால், ஒருவரை ஒருவர் பகைத்துக்கொள்ளும் நிலையில் கொஞ்சம் மாற்றம் ஏற்பட, சந்தர்ப்பம் இருக்கும். போரை மூட்டிவிட்டு, பலன் அனுபவிக்கக் காத்திருக்கும், பணவேட்டைக்காரர்களா, பகை குறையும் நல்வினையைச் செய்வர்?

மேலும் மேலும் பகையை வளர்க்கும் எண்ணத்தோடு, பாகிஸ்தானில், இந்தியத் துணி பகிஷ்காரத்தைவிரிவாக வற்புறுத்த, திட்டமிட்டு வருகிறார்கள். இத்தீவினைக்குப் பணந்திரட்டவும், பலத்த பிரசாரம் செய்யவும், வெற்றிக்கான வழி தேடவும் இன்னும் பெரிய அளவில் முயற்சிக்கப் போகிறார்கள் என்று செய்தி வருகிறது. பாக்கிஸ்தான் அரசாங்கம், இந்த ஆபத்து நிறைந்த, அருவருக்கத்தகுந்த செயலை, முளையிலேயே கிள்ளி எறிய முன்வரவேண்டும். முன் வருமா?

### செங்குந்தமித்திரன் அச்சகத்திற்கு ரூ. 1000

"முன்னணி" வார இதழை அச்சடித்ததற்காக, 1931-வது வருஷத்திய அச்சு அவசரச் சட்டத்தின் கீழ், 26-9-49 ந் தேதிக்குள் ரூ. 1000 ஜாமீன் கட்டவேண்டுமென்று, சென்னை சர்க்கார் கட்டளையிட்டிருக்கிறது.

### "முன்னணி"க்கு ரூ. 1000

1931 - வது வருஷத்திய இந்திய அவசர அச்சுச் சட்டத்தின் கீழ், முற்போக்குப் பத்திரிகையான 'முன்னணி' க்கு, சென்னை சர்க்கார், ரூ 1000 ஜாமீன் கட்ட உத்தரவிட்டு இருக்கிறது. 26-9-49-ந் தேதிக்குள் இத் தொகை கட்டியாக வேண்டும்.

# எதிர்கால வேலைத்திட்ட அமைப்புக் கூட்டம்

திராவிடர் கழகத் தோழர்களின் எதிர்கால வேலைத் திட்ட அமைப்புக்கான ஆலோசனைக் கூட்டம், 17—9—49 சனிக்கிழமை காலை 10-மணிக்கு, சென்னை பவழக்காரத் தெரு, 7-ம் எண் இல்லத்தில் நடைபெறும்.

பெரியார் போக்கினைக் கண்டித்துக் கருத்துரை வழங்கியுள்ள, திராவிடர் கழக மத்ய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் கூடிக் கலந்து பேசி, எதிர்கால வேலைத்திட்டம் பற்றி முடிவு செய்வர்.

சி. என். அண்ணாதுரை.

# ஹனுமான் பேசினது...

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

களைக் கொண்டும், கொடிகளைக் கொண்டும், கவர்ச்சியுள்ளதாக மாற்றி அமைக்க, பணி புரிவது தான், நகர பிதாவின் நற்பணி - நீங்காக் கடமை. அத்துறையில், தனது அறிவை மேலும் பெருக்கிக் கொள்ளவும், ஆற்றலை அதிகரித்துக்கொள்ளவும், தேவைகளை நிறைவேற்றுவதில் வெற்றி காணவும், எடுத்துக்கொள்ளும் முயற்சியில்தான், ஒரு மேயரின் சிறப்பும் இழுக்கும் அடங்கி இருக்கிறது.

பாட்டுக்குப் பல்லவி பாடுவது, நாட்டியத்திற்குத் தாளம் போடுவது, படத்தைத் திறந்து மகிழ்வது, பஜனை மடத்தில் பாவசமடைவது, பாரக்குக் கூறுவோரிடம் பல்லிளித்துக் காட்டுவது, வீற்றிருக்கும் பதவிக்கு ஏற்றம் தராது! இடத்துக்கேற்ற இயல்பு இல்லை என்ற தூற்றல் மொழிகளைப்பும்! நிரக,

'கல்லாத கலையும் வேதக்கடலும்' என்று காண்கிறான் ஹனுமானைக் கம்பன். 'பல கலை பயின்றவன்' என்பதோடு வாலமீது நிற்கிறான். 'ஹிந்தி மொழியும் கற்றுத் தேர்ந்தவன் ஹனுமான்' என்று அருளிச் செய்கிறார், சென்னை மேயர் எம்பெருமான்!

'இலங்கையில். சீதா பிராட்டியிடம் ஹனுமான் பேசினது ஹிந்தி மொழியில்தான்' என்று அழுத்தம் திருத்தமாக அறைகிறார், சென்னை மேயர் இராமசாமி நாயுடுகாரு அவர்கள்! திரிசடையாக இருந்து கேட்டாரோ, வேறு 'அரக்கி'யாக இருந்து கேட்டாரோ, ஹனுமான் சீதையிடம் ஹிந்தி பேசினதை, அன்பர் இராமசாமி நாயுடு அவர்கள், நாம் அறியோம்! 'இராவணனும், ஹிந்தி மொழியில இணையற்ற இலக்கியங்களை இயற்றியுள்ளான்' என்று கூறாமல் விட்டாரே, மேயர் பெருமான், அதற்காகத் தமிழர்கள் அவருக்குக்கடமைப் பட்டுள்ளார்கள்!

'ஹிந்தி ஒரு தொன்மை மொழி' மேயரின் வாதம் இது அதற்கான ஆதாரங்களைக் கூறவில்லை அவர்! ஆதாரங்கள் இருந்தால் அல்லவா அவர்கூற? மூன்று ஆண்டுகளிலிருந்து அறுநூறு ஆண்டுகளுக்குள் உருவாக்கப்பட்டதுதான் 'ஹிந்தி மொழி' என்று, மொழி வல்லுநர் பலரும், தக்க மேற்கோள்களுடன், நிலைநாட்டியுள்ளார்கள். இவைகளை எல்லாம் கற்றுவது, கற்றவர்களை நாடிக்கேட்டாவது, ஹிந்தி மொழிக்கு ஏற்றம் தேடி இருக்கக்கூடாதா மேயர் பெருந்தகை? ஏதோ சர்வகலா வல்லவர்போல், 'கங்காதரா மாண்டாயோ' என்று ஒப்பாரி வைக்க ஆரம்பித்துவிட்டாரே, இந்த நகர பிதா! நல்லகா இந்த நாவசைப்பு?

ஹிந்தி மொழியையும் ஒரு வியாபாரம் செய்யும் பொருளென்று கொண்டுவிட்டாரா, இப்பெரியவர்? ஒரு நகரத்தின் மேயராக இருக்கும் காரணத்தாலேயே, அவர் எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், உண்மைக்கு மாறிப்பேசி விடலாம் என்று உறுதிகொண்டு விட்டாரா?

மேயர், ஹிந்தி மொழியின் ஆரம்பத்தைக் கண்டுபிடித்துக் கூறிய இடம் ஆரிய சமாஜம்! சந்தர்ப்பம், ஆரியசமாஜத்தார்ல் நிர்வகிக்கப்படப்போகும் ஹிந்தி மொழிப் பயிற்சிக் கூடத்தின் திறப்புவிழா ஆற்றுகையில்! அங்கிருந்தோர், மேயரின் பொய்யுரை கேட்டு அகமகிழ்ந்திருப்பர்-கைகட்டி- ஆரவாரம் செய்திருப்பர்-மேயரையும் மனதாரப் புகழ்ந்திருப்பர்! உடனிருந்த கனம் மந்திரி பக்தவத்சலனாரும், மேயரை விழாவிற்கு அழைத்த அன்பர்களும், மேயரின் கல்லாமைக்கு-மொழியின் வரலாறு தெரிந்திராத அறியாமைக்கு, உள்ளுக்குள் எள்ளி நகையாடி இருப்பர். திருத்தி இருக்கமாட்டார்கள், நேர்மைத்திறம் அதிர்நோரின் அருங்குணம் அன்றோ அது? எந்த முறையைக் கையாண்டாவது, ஹிந்தி மொழியைத் தென்னாட்டவர் மீது திணித்தாகவேண்டுமென்ற கெடுமதி கொண்டுள்ளவர்களுக்கு, மேயர் போன்ற விபீஷணர்கள் கூறுவது பொருந்தா உரையாயினும், பொருளற்ற உரைதான் என்று தெரிந்துகொண்டிருந்த போதிலும், உண்மையை எடுத்துக்கூற எப்படித் துணிவு பிறக்கும்?

வரலாற்றோடு இயைந்தப் புனைந்துரை இராமாயணம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். காலம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று முடிவு கட்டியுள்ளனர் மூதறிஞர்கள். மேயர், இவைகளை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு, உணராத உன் மத்த நிலையிலோ, 'சீதாபிராட்டியோடு ஹிந்திமொழியில்தான் ஹனுமான் பேசினான்' என்று, அறுநூறு ஆண்டுக்கு முன்னர் கற்பனையிலும் காட்சியளிக்காத மொழியை, மொழி நூல்களின் கரை கண்டவர் போல், ஆரிய சமாஜ அரங்கத்தில் ஆடி அமருகிறார், சென்னை நகர மேயர் இராமசாமி நாயுடுகாரு அவர்கள்.

இவ்வாறு பேசுவது ஒரு மேயருக்கு அழகல்ல! அவர் கடமையும் அதுவல்ல! வெறும் விளம்பரம் தேடும், வெளிச்சத்தில் விளையாடும், முதல் தரமான சபலை வேட்டையாகும் இது! விட்டொழிப்பாராக, இந்த விளம்பரம் தேடும் வீண் வேலையை!

மயில் ஆடலாம்—அது இயற்கை—பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும். வான்கோழி ஆடுவது, வெறுப்பைத்தான் கொடுக்கும்! குயில இசை செவிக்கு இன்ப மூட்டும். காகத்தின் கரைதல் கர்ணகடூரமாக இருக்கும்! புலிபோல் வேஷம் போடுவது, நகைச்சுவைக்கு நல்லதோர் சாதனமாகும்! மொழி வரலாறு கற்காத மேயர், ஹிந்தி மொழியில தான், சீதையோடு ஹனுமான் பேசினான் என்று கூறுவது, பிதற்றல் என்ற இலக்கணத்திற்குள்ளாகும், பெருங்குற்றமாகும். அவர் வகிக்கும் பதவிக்கும் மதிப்பைக் குறைக்கும் சிறு செயலாகும்.

## தேவை

நமது அச்சகத்திற்கு நல்ல நிலைமையில உள்ள டபுள் டிம்மி சிலண்டர மிஷின் ஒன்றுதேவை. விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்

# தேசத் துரோகப் படலம்

வெள்ளையராட்சி இந்த நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலே, கூட்டங்களுக்கு 144 தடை உத்தரவு விதிக்கும் மாஜிஸ்ட்ரேட்கள், மக்களின் பேச்சுரிமையைத் தடுக்கும் தேசத் துரோகிகள், என, இன்று ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துள்ள காங்கிரஸ்காரர்கள் வருணிக்கப்பட்டனர்.

தடியடி கொடுக்கும் போலீஸ்காரர்கள் தேசத்துரோகிகள் எனப்பட்டனர்; மந்திரிப் பதவிகள் ஏற்ற நம் நாட்டவர் தேசத்துரோகிகள் எனப்பட்டனர், நாமினேஷன்மூலம் சட்டசபை, ஸ்தல ஸ்தாபனங்கள் முதலியவற்றில் அங்கம் வகித்தவர்கள் பின் வாசல்வழி நுழைந்த தேசத் துரோகிகளாக்கப்பட்டனர். கோயில் பணம், கொள்ளை போகக்கூடாதென அறநிலையப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்த பார்ந நோக்கம் படைத்த பனகல், தேசத் துரோகி எனப்பட்டார். இவ்வாறு தேசத் துரோகி என்பது தங்கள் கருத்துக்கு எதிராக இருந்த அனைவருக்கும் காங்கிரஸ்காரர்கள் அளிக்கும் பட்டமாக இருந்தது.

ஆனால், வெள்ளையராட்சி போய், நாடுஉரிமைபெற்ற பிறகு கூட, அந்த வெள்ளையர்கால ஆட்சியைவிடச் சங்கடமான ஆட்சியை நடத்தும் காங்கிரஸ்காரர்கள், அதே தேசத்துரோகச் செயல்களை இப்போது தாங்களே செய்து வருபவர்களாக மாறி விட்டார்கள். எனவே இவர்களைப் பார்த்து இந்தி சாஹித்ய சம்மேளனம் போன்ற பிற்போக்குக் கூட்டம், தேசத் துரோகிகள் என்று பழிக்கத் தொடங்கி விட்டது. முன்னையிட்[illegible] முழுங்குகின்றது. இந்தியை இவர்கள் வற்புறுத்திக் கட்டாய தேசிய மொழியாக்கவில்லை, என்பதே இப்பிற்போக்குக் கூட்டத்தின் ஆத்திரத்திற்குக் காரணமாகும்.

## சோப் தொழில் வளர முடியுமா?

இந்தியாவில், மேனாட்டு முறையில் சோப் செய்வதற்காக முதன் முதலாக 1879-ல் மீரத்தில் ஓர் ஆங்கிலேயரால் ஒரு தொழிற்சாலை துவக்கப்பட்டது. 1913-14ல் ஆண்டொன்று 14,000 டன் சோப்பு இந்தியாவில் உற்பத்தியாயிற்று. 1928—29 ல் கொச்சியில் டாட்டா கம்பெனியார் பெரிய சோப் தொழிற்சாலை துவக்கினர்.

இத்தொழில் வளர்ந்து இன்று ஆண்டொன்றுக்கு 2½ லட்சம டன் சோப் உற்பத்தியாகிறது. ஆனல் நம் நாட்டவர் பயன் படுத்துவது 1¼லட்சம் டன் தான். மேனாட்டினர் தலைக்கு 20 ராத்தல்சோப் பயன்படுத்துகையில் இந்தியர் தலைக்கு 12 அவுன்ஸ் சோப்பையே பயன்படுத்துகின்றனர்.

இத்தொழில் இன்னும் வளர்ந்து ஆண்டுகளுக்கு ப லட்சம் சோப் உற்பத்தியாகலாமென மதிப்பிடப்படுகிறது. ஆனல், நம் நாட்டுமக்கள் வாழ்க்கை நிலை உயராதவரை, இத்தகைய பொருள்களைப் பயன்படுத்தும் நிலைமை வளர முடியாது. எனவே, இந்தத் தொழில்கள் அதிக உற்பத்தியால் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசாங்கம் பாடுபட வேண்டும். நமநாட்டுச் சோப்புகளை வெளிநாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்ய வழிகாண வேண்டும்.

# ஆசிரியருக்கு முடங்கல்

### திருச்சியில் கூட்டம்

ஆசிரியர் அவர்களுக்கு 5-9-49-ந் தேதி திருச்சியில் பெரியார் நடத்திய "ஆதரவு தேடும் நாடக," நிகழ்ச்சியை, வெளியூர் 8-9-49-ந் தேதி விடுதலையில் கண்ணுற்றேன். எந்தப் பத்திரிகையில் பொய்ச்சேதிகள் வந்த போதிலும், நம விடுதலையில் பொய்ச்சேதிகளே வெளிவராது என்று பெருமையுடனும், பூரிப்புடனும், சொல்லிக் கொண்டிருந்த என்னை திடுக்கிட செய்துவிட்டது! ஏன்? இவ்வித மாறுதல்!......? கேள்விகள் ஒழுக்கத்திற்கு முரண்பட்ட கேள்விகளாய், இருந்ததாம்!

எது ஒழுக்கத்திற்கு முரண்பட்ட கேள்வி? நீங்களே பாருங்கள்.

1-வது கேள்வி:—நீங்கள் திருமணம் செய்து கொண்டது-சுயநலத்திற்கா? பொது நலத்திற்கா? பொது நல-மெனில், எவ்விதம்? இத் திருமணம் எவ்வகையில், சீர் திருத்தமாகும்?

இக்கேள்விக்குப்பதிலைப்பாருங்கள்:- நான் எங்கே திருமணம்-செய்து கொண்டேன்!-எது திருமணமாகும்? இதுவா?திருமணம்-திருமணம் என்ற—பெயரினால் செய்துகொண்ட ஒருஏற்பாடே-யொழிய திருமணம் என்று எப்படி சொல்லமுடியும்? நான்என்னுடைய வாழ்க்கைக்கு ஒரு துணை தேடிக் கொண்டேன்-அதாவது, ஒரு நண்பன்! தோழன்! சிநேகிதன்-இல்லையா? அது போல— அதை சட்டப்படி சர்க்கார் அறிய பதிவு செய்து கொண்டேன்.

மேலும் சிற்றின்பத்திற்காகத் தான், திருமணம் செய்துகொள்வது என்றால், அதற்கு திருமணமே செய்து கொள்ளவேண்டாமே! இன்றைய சமுதாயத்திலே — சிற்றின்பத்திற்காகவும், பிள்ளைப் பேற்றுக்காகவுந்தான்-திருமணம் செய்துக் கொள்வது என்று ஏற்பட்டு-நடை முறையிலேயும் ஒப்புக் கொள்ளப்பட்டு வந்தாகிவிட்டது.

உண்மையில் திருமணம் செய்து கொள்வது, பிள்ளைப் பேற்றுக்குத்தான்—சிற்றின்பத்திற்குத் தான்-என்று நீங்கள் சொல்லுவீர்களானல்—நான் சொல்லுகிறேன்-பிள்ளை பெற்றுக்கொள்ள அல்ல, நான், திருமணம் செய்து கொண்டது என்று.

மற்றும் திருமணம்செய்துக்கொண்டது பொது நலத்திற்கா? சுயநலத்திற்கா? என்று கேட்கப் பட்டிருக்கிறது.

திருமணம் செய்து கொள்வதானது; ஒருவனுடைய சுய நலத்திற்காகத்தான. திருமணம் செய்து கொள்வதாகும்!!...... இத் திருமணத்திற்கும், சீர் திருத்தத்திற்கும் சிறிதும் சம்பந்தமே—கிடையாது.......திருமணம் செய்து கொள்வது என்னுடைய சொந்த விஷயம் அதைக் குறித்துக்கேட்க எவருக்கும் உரிமை கிடையாது!!

இனி. 2-வது கேள்வி:—ஒருஇந்து சீர்திருத்தவாதி, உண்மைத்—திராவிடனாகிவிட முடியுமா?

பதில்:—"முடியாது."

கேள்வி நெ. 3:—தளபதி எத்தனை நாட்களாக இம்மாதிரிக் குற்றங்கள் செய்து கொண்டு வருகிறார்?

பதில்:— சேர்ந்ததிலிருந்துதான்!

கேள்வி நெ. 4:—தலைவருக்கும், தளபதிக்கும் என்ன தகராறு?

பதில்:—என்ன தகராறு இருக்கிறது? ஏதோ சிறு சிறு தகராறான இருக்கும்-அவர் ஏதாகிலும்-சிறு குற்றங்கள் செய்திருந்தால், நான் மன்னித்திருப்பேன். என்னிடம் ஏதாகிலும் குற்றம் கண்டிருந்தால், அவர் மன்னித்திருக்கலாம்-மன்னிக்க முடியாத குற்றங்களாயிருப்பின் பிரிந்து போய்விட வேண்டியதுதான்.

கேள்வி நெ. 5:— சொத்து வாரிசுக்கும, பொதுவுடமைக்கும்-என்ன வித்தியாசம்?

பதில் பொதுவுடமை என்பது பகிர்ந்தளிப்பது, என்று சொல்லலாம். சொத்துக்கு வாரிசு ஏற்படுத்துவதும் பொது உடமைதான், என்று ஓரளவு அறிவாராய்ச்சியுடையாரும் ஒத்துக் கொள்ள முடியாததாக ஏதேதோ சொல்லி மழுப்பிவிட்டு, கடைசியில், நீங்களெல்லோரும் என்னை ஆதரிக்கவேண்டும், என்றுகேட்டுக் கொண்டது தான் பார்ப்பதற்கு மிகவும் பரிதாபகரமாக இருந்தது.

சரியான பதிலில்லை—என் பெரியார். இதுபோல மாறிவிட்டார் என்றும—பாரப்பா! புதுமாப்பிள்ளை போல் நின்று பேசுகிறார். என்றும், ஆச்சரியம! ஆர்ப்பாட்டம்-கேலி-போன்ற சொற்களே கூட்டத்தில் நிறைந்திருந்தன.

### மருத்துவகுல முற்போக்கு இளைஞர் கழகம்

கும்பகோணம் 11-9-49 ம் தேதி டாக்டர். V. பசுபதி அவர்களின் வைத்திய நிலையத்தில் ஆசிரியர் K. மருதமுத்து அவர்கள் தலைமையில் கழகத்தின் இரண்டாவது கூட்டம் கூட்டப் பெற்றது.

அவ்வமயம் மருத்துவகுல இளைஞர்களுக்குத் தனியாக ஒரு பள்ளிக் கூடம உணவுவிடுதியுடன் அமைக்க வேண்டிய நிலையைப் பற்றியும், இதா லைத் தொழில் பயிற்சிமுகாம் நிறுவ வேண்டியதின் அவசியத்தையும் தலைவர் விளக்கமாகப் பேசிய பின்னர் கழக நிர்வாகஸ்தர்கள்தேர்தல் நடந்தது. தோழர் டாக்டர் V. பசுபதி அவர்களைத் தலைவராகவும், D. கிருஷ்ண மூர்த்தி காரியதரிசியாகவும, டாக்டர் R. S.மணி பொக்கிஷதாராராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அடுத்தபடியாக பள்ளிக்கூடம் கட்டுவதற்குரிய நிதிப் பாதுகாப்புக் கமிட்டி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர், டாக்டர் V. பசுபதி அவர்கள தம்மைத் தலைவராக தேர்ந்தெடுத்தமைக்கு நன்றி செலுத்திவிட்டு, தமிழ்நாட்டில் உள்ள பட்டதாரிகளும், படித்த இளைஞர்களும் கழகத்தின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றத் தொடர்பு கொள்ள வேண்டுமெனவும், அவர்களின் சீரிய ஆலோசனைகள் கழக நிர்வாகிகளால் கடிதமூலமாவது உடனடியாக வரவேற்கப்படுவதாகவும் கூறினர்.

பின்னர் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது எனச் செயலாளர் எழுதுகிறார்.

### திருமணம்

பாலூர், செப்,12—

செங்கற்பட்டுக்கு அடுத்த பாலூர் கிராமத்தில் 11-9-49 ஞாயிறு காலை தோழர் டி. நவநீத கோபாலுக்கும், தோழியர் கஸ்தூரிபாய் அவர்களுக்கும், தோழர் கஜபதி அவர்கள் தலைமையில் சீர்திருத்த முறைப்படி திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அதுபோது தோழர்கள் காஞ்சிபுரம சி.வி.எம். அண்ணாமலை, செங்கற்பட்டு சின்னையா, சென்னை கே. ரங்கமன்னார் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். திருமணத்தின் நினைவாக "மாலைமணி"க்கு ரூ 4-0-0 அளிக்கப்பட்டது.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street. Madras-1.